பதிவு எண். ம. 6311 ★ தொலைபேசி: 81331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 19] சென்னை: ஐப்பசி 24 (10—11—71) புதன் வெளியூர்: ஐப்பசி 25 (11—11—71) வியாழன் [இதழ்: 123

பொள்ளாச்சியில் தீவிரப் பிரசாரம்

தோழமைக் கட்சியினருடன் கழக முன்னணித் தோழர்களின் பணி

கழக வேட்பாளரை ஆதரித்து கூட்டணித் தலைவர்கள் அறிக்கை

சென்னை, நவ. 10—

பொள்ளாச்சி நாடாளுமன்றத் தொகுதி இடைத்தேர்தல் நெருங்கிவிட்டது; வருகிற சனிக்கிழமை (நவ. 13) வாக்குப் பதிவு நடைபெறவிருக்கிறது; இத்தேர்தலில், ஆறு சட்டமன்றத் தொகுதிகளையும் சேர்ந்த மொத்தம் 6 05 642 வாக்காளர்கள் வாக்குப் பதிவு செய்யவிருக்கின்றனர்.

வாக்குப் பதிவு நாள் நெருங்க நெருங்க கழகக் கூட்டணித் தேர்தல் பிரசாரமும் தீவிரமாக நடைபெற்று வருகிறது; கழக வேட்பாளரை ஆதரித்துத் தோழமைக் கட்சித் தலைவர்களும் — கழக முன்னணித் தோழர்களும் தொகுதிக்கு வந்து பிரசாரம் செய்துவருகின்றனர்.

கழகத் தோழர்களின் கடமையை உணர்த்தி — கழகத் துணைப் பொதுச்செயலாளர் திரு. க. இராசாராம் அவர்கள் ஓர் அறிக்கை விடுத்துள்ளார்.

முஸ்லிம் லீக் தலைவர் காயிதே மில்லத் முகம்மது இஸ்மாயில் எம்.பி., தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சிவஞானம், இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் திரு.என்.கே. பழனிச்சாமி ஆகியோரும் அறிக்கை விடுத்துள்ளனர்.

மத்திய அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள், 'மாபெரும் வாக்குகள் வித்தியாசத்தில் கழக வேட்பாளரை வெற்றி பெறச் செய்ய வேண்டும்' என்று கூறியுள்ளார்.

க. இராசாராம் வேண்டுகோள்

சென்னை, நவ. 10

தி. மு. கழகத் துணைப் பொதுச்செயலாளரும் — பிற்பட்டோர் நலத்துறை அமைச்சருமான திரு. க. இராசாராம் அவர்கள் அறிவிப்பதாவது :—

"தி. மு. கழகத்தின் தலைவர் டாக்டர் கருணாநிதி அவர்கள், பொள்ளாச்சித் தேர்தல் களத்துக்கு சென்று — அங்குள்ள வாக்காளப் பெருமக்களைச் சந்தித்து, 'வெற்றிச் செய்தியினை எனக்கு நான் செல்லும் அமெரிக்க நாட்டுக்கு அனுப்புங்கள்' என்று கூறிவிட்டு — அமெரிக்காவுக்குப் பயணமாகியுள்ளார்.

"தேர்தல் நடைபெறும் காலங்களில் கலைஞர் அவர்கள், எப்போதும் ஆலோசனைகளை நல்கி — எப்படி எல்லாம் பணியாற்ற வேண்டும் என்று நல்ல அறிவுரைகளை வழங்கிக் கொண்டிருப்பார்; இன்று அவர், பொள்ளாச்சித் தொகுதி வாக்காளப் பெருமக்களிடத்திலேயும்—தமிழக மக்களிடத்திலேயும் கொண்டுள்ள சிறந்த நம்பிக்கை காரணமாக அமெரிக்காவுக்குப் புறப்பட்டுச் சென்றிருக்கிறார்.

"அவர் இல்லாத நேரத்தில் பொள்ளாச்சித் தேர்தலில் பம்பரம்போல் சுற்றிப் பணியாற்றி வாக்காளப் பெருமக்களை சந்திப்பதும் — அவர்களை ஓட்டுச் சாவடிகளுக்குக் கொண்டு வந்து சேர்ப்பதும் தி. மு. கழகத் தோழர்களின் நீங்காக் கடமையாகும்.

"கோவை மாவட்டத்தில் மட்டும் இந்தத் தேர்தல் நடைபெறுவதாகக் கருதிவிடாமல், கோவை மாவட்டத்தைச் சுற்றியுள்ள மாவட்டங்களில் உள்ள சட்டமன்ற உறுப்பினர்கள்— வட்டச் செயலாளர்கள்— நாடாளுமன்ற உறுப்பினர்கள் — கழகத்தின்பால் நீங்காத பற்றும் பாசமும் கொண்ட ஆர்வமிக்க நண்பர்கள் அனைவரும் பொள்ளாச்சித் தொகுதிக்குப் புறப்பட்டுவந்து தேர்தல் காரியங்களைச் சிறப்போடு செய்து —சிறந்த வெற்றியைக் குவித்து — அந்த ஒப்பற்ற செய்தியை கழகத் தலைவர் கலைஞருக்கு இங்கிருந்து தெரிவிக்க வேண்டும் என்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

"பொள்ளாச்சிக்கு வருகின்ற நண்பர்கள், ஆங்காங்குள்ள கழகத் தேர்தல் அலுவலகங்களில் தம்முடைய பெயர்களைப் பதிவு செய்துகொண்டு பணியாற்றுவது சிறப்பாக இருக்கும்.

"நாம் காட்டுகின்ற உற்சாகமும் உழைப்பும் கழகத் தலைவருக்கு நல்ல மனநிறைவைத் தரும் அளவுக்கு இருக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

"நம்மை வெல்லும் படை இல்லை என்பதை உணர்த்தவாரீர்! என அனைவரையும் அழைக்கிறேன்.

ம. பொ. சிவஞானம் வேண்டுகோள்

தமிழரசுக் கழகத் தலைவர் திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள் தமது 'செங்கோல்' இதழில் எழுதியுள்ளதாவது —

"பொள்ளாச்சி நாடாளுமன்றத் தொகுதி வாக்காளர்கள், எதிர்க் கட்சிக்குரிய கடமையைச் செய்யத் தவறிவிட்ட சிண்டிகேட் — சுதந்தராக் கட்சிகளின் ஆதரவைப் பெரிதாக மதியாமல், தி.மு.க. வேட்பாளர் திரு. மோகன்ராஜ் அவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டுகிறேன்.

"சுயேச்சைக்கு வாக்களிப்பது சனநாயகமாகாது; சனநாயகத்திலே கட்சிகளுக்குத்தான் இடம் — சுயேச்சைகளுக்கு அல்ல!

"தி.மு. கழக அரசு, சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள சாமானியர்களின் அரசு; அது நிலைபெறச் செய்வதற்குப் பொள்ளாச்சித் தொகுதியிலே தி. மு. க. வேட்பாளருக்கு வெற்றி தருவது வாக்காளர் கடமையாகும்.

"முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள் கூறியதுபோன்று, பொள்ளாச்சியில் தி. மு. க. வேட்பாளர் வெற்றி பெறுவது உறுதி; ஆயினும் மத்திய அமைச்சர் சி. சுப்பிரமணியம் கூறியது போன்று, சுயேச்சை வேட்பாளரின் ஜாமீன்தொகை பறிபோக வேண்டும்; அது ஒன்றுதான், சுயேச்சைக்கு வால் பிடிக்கும் எதிர்க் கட்சிகளுக்குப் பாடம் கற்பிப்பதாக அமையும்!"

கம்யூனிஸ்டுக் கட்சி ஆதரவு

பெருந்துறைத் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினரும்—இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சிப் பிரமுகருமான என். கே. பழனிச்சாமி, கழக வேட்பாளருக்கு ஆதரவாக விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது :—

"பொள்ளாச்சி நாடாளுமன்றத் தொகுதியில் நடைபெறவிருக்கும் இடைத் தேர்தலில், முற்போக்குக் கூட்டணி சார்பில் தி. மு. கழகம், மோகன்ராஜ் அவர்களை வேட்பாளராக நிறுத்தியுள்ளது.

"நமது கம்யூனிஸ்டுக் கட்சியும் அவரை ஆதரிப்பது என்று முடிவு செய்துள்ளது.

"ஏற்கனவே முற்போக்குக் கூட்டணி வெற்றிபெற்றதன் காரணமாக ஓரளவுக்கு மக்களுக்குச் சாதகமான முறையில் அரசியல் சட்டத்தில் சில பிரிவுகளை மாற்ற முடிந்திருக்கிறது; ஆகவே, மோகன்ராஜ் வெற்றிபெற வேண்டியதன் அவசியத்தை நாம் உணருகிறோம்."

காயிதே மில்லத் வேண்டுகோள்

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் காயிதே மில்லத் முகம்மது இஸ்மாயில் எம். பி. அவர்கள், தி. மு. கழக வேட்பாளர் வெற்றிபெற வேண்டியதன் அவசியத்தை விளக்கி வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு :-

"பொள்ளாச்சி நாடாளுமன்ற இடைத் தேர்தலில் தி. மு. க. வேட்பாளர் மோகன்ராஜ் அவர்களுக்கே வாக்காளப் பெருமக்கள் ஒவ்வொருவரும், தங்களது விலையுயர்ந்த வாக்கை கொடுத்து ஆதரிக்கும்படியும் தி. மு. க. வேட்பாளருக்கு சிறப்பான வெற்றி கிடைப்பதற்கான உதவிகளை செய்ய வேண்டுமாயும் பெரிதும் விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்றேன்."

பாகிஸ்தானுக்கு சீனு கைவிரிப்பு?

புதுடில்லி, நவ. 9 —

"அண்மையில் சீனாவுக்குச் சென்று பூட்டோ நடத்திய பேச்சுவார்த்தையில், பாகிஸ்தான் எதிர்பார்த்த அளவுக்கு ஆதரவு கிடைக்கவில்லை எனத் தெரிய வருகிறது"

என்று உள்துறைத் துணையமைச்சர் கே. சி. பந்த் இங்கு கருத்தறிவித்தார்.

(4-ம் பக்கம் பார்க்க)

நவ. 13-ல் போர் துவங்கும்?

பெரோஸ்பூர், நவ. 9 —

"பாகிஸ்தானில் எங்கு நோக்கினும் போர் குறித்த பேச்சே அடிபடுகிறது"

என்று பாகிஸ்தானிலிருந்து திரும்பும் வெளிநாட்டுப் பயணிகள் தெரிவித்தனர்.

"இது தொடர்பாக, நவ. 13-ஐ போர் துவக்க நாளாகக் குறிப்பிட்டே கூறப்படுகிறது"

என்று ஜெர்மன் பயணி ஒருவர் கூறினர்.

180 தடவை போர் நிறுத்த உடன்பாட்டை பாகிஸ்தான் மீறியது

ஐ.நா.வுடன் இந்தியா தொடர்பு

புதுடில்லி, நவ. 9—

ஜம்மு — காஷ்மீர் பகுதியில் பாகிஸ்தான் போர் நிறுத்த உடன்பாட்டைத் தொடர்ந்து மீறி வருவதுபற்றி, இந்தியா, ஐ. நா. இராணுவ பார்வையாளர்களிடம் புகார்களைத் தாக்கல் செய்தது.

இப்புகார்கள்மீது ஐ. நா. இராணுவப் பார்வையாளர்கள் என்ன நடவடிக்கைகளை எடுத்துள்ளனர் என்பதை அறிய இந்தியா தற்போது ஐ. நா. தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டிருக்கிறது.

அக்டோபர் 1-ந்தேதி முதல் நவம்பர் 6-ந் தேதிவரை பாகிஸ்தான் 180 தடவை போர் நிறுத்த உடன்பாட்டை மீறியிருக்கிறது.

நியூயார்க்கில் சீனத் தூதுக் குழு

நியூயார்க், நவ. 10—

ஐ. நா.-வுக்கு சீனா அனுப்பும் முன்னணித் தூதுக் குழு நேற்று முன்தினம் நியூயார்க் வந்து சேர்ந்தது; இக்குழுவில் 6 பேர் உள்ளனர்.

இக்குழுவினர் வந்திறங்கிய கென்னடி விமான நிலையத்தில் பாதுகாப்புக்காக 150 போலீசார் நின்றிருந்தனர்.

இராஜஸ்தானில் உணவுப் பஞ்சம்

2,500 கிராமங்கள் பாதிப்பு

இராஜஸ்தான், நவ. 10 —

இந்த ஆண்டு காரிப் [illegible] மோசமடை[illegible], இராஜஸ்தானில் உணவுப் பற்றாக்குறை ஏற்படக்கூடிய நிலை இருந்துவருவதாகக் கூறப்படுகிறது.

பெருமை மிகு வரலாற்றுக்கு உரியவர்கள் நாம்

இருந்தும் உலகில் சிறந்தவர்களாக வாழும் எண்ணமின்றித் தாழ்ந்தோம்

சிலம்பீந்த செல்வருக்குச் சிலையெடுத்ததன் மூலம் சிறப்பெய்துவோம்

இளங்கோவடிகள் சிலைத் திறப்பு விழாவில் நாவலர் இரா. நெடுஞ்செழியன் உரை

சென்னை, நவ. 10—

"இந்த மண்ணுக்கு ஆக்கம் அளிப்பதற்காக எழுந்த காவியம் சிலப்பதிகாரம்; 1,800 ஆண்டுகட்குமுன் சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குச் சிலை எழுப்பினான்; 1,800 ஆண்டுகட்குப்பிறகு கண்ணகிக் கதையைத் தந்தவருக்கு நாம் இன்று சிலை எழுப்புகிறோம்.

"உலகில் இத்தகையச் சிறப்புக்குரிய வரலாறு இல்லாதவர்கள் சாதாரண வரலாற்றை வைத்தே தலையெடுத்து முன்னேறியிருக்கிறார்கள்.

"நமக்கு வரலாற்றுப் பெருமைகள் ஏராளமாக இருந்தாலும், அதைப் பயன்படுத்தி, அதுபோல் நாம் உலகில் மிகச் சிறந்தவர்களாக வாழவேண்டும் என்று எண்ணும் எண்ணமில்லாததால்தான் நாம் வளராமல் இருக்கிறோம்.

"இத்தகையப் பெருமைக்குரிய -- புகழுக்குரியவரின் சிலையைத் திறப்பதைக்கூட இழித்தும் பழித்தும் சொல்பவர்கள் இருக்கிறார்கள்; இருந்தாலும், 'பயனில்சொல் பாராட்டுவானை மக்கட் பதடி யெனல்' என்று வள்ளுவர் கூறியிருப்பதற்கிணங்க, பயனில் சொல் பாராட்டுவார்களை ஒதுக்கி வைப்போம்.

"நாம் செய்யும் தொண்டெல்லாம் தமிழுக்கும் -- தமிழ் நாட்டுக்கும் ஆற்றும் தொண்டாக அமையட்டும்"

என்று கல்வியமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், சென்னைக் கடற்கரையில் நடைபெற்ற இளங்கோவடிகள் சிலைத் திறப்பு விழாவுக்குத் தலைமை வகித்து உரையாற்றுகையில் கூறினார்.

அவர் தமது உரையில் மேலும் கூறியதாவது:—

"தமிழுக்கும் -- தமிழருக்கும் -- தமிழகத்திற்கும் ஈடிலாப் புகழை ஈட்டித் தந்தவர் இளங்கோவடிகள்; அத்தகைய பெருமைக்குரியவரின் சிலை திறக்கும் இருநாள் எவ்வளவு சிறப்புக்குரியது என்பது ஒவ்வொரு தமிழனும் எண்ணி மகிழவேண்டிய நாளாகும்.

'யாமறிந்த புலவரிலே கம்பரைப் போல் -- வள்ளுவர்போல் -- இளங்கோவைப்போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை; உண்மை -- வெறும் புகழ்ச்சி இல்லை' என்று பாடினார் பாரதி.

அத்தகைய புகழுக்குரிய வள்ளுவர் சிலையையும் -- கம்பர் சிலையையும் இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டின்போது திறந்து வைத்தோம்; இளங்கோவுக்கு இப்போது சிலை நிறுவியிருக்கிறோம்.

சிலப்பதிகாரம் எவ்வளவு சிறப்புக்குரியது -- அதனால் தமிழகம் எவ்வளவு பெருமை பெற்றது என்பதை, 'நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணி ஆரம் படைத்த தமிழ்நாடு' என்ற வரிகளால் நாம் அறியலாம்.

தமிழகத்தின் வாழ்க்கையை -- பண்டைக் காலப் பழக்க வழக்கங்களை -- பண்பாட்டைப் படம் பிடித்துக் காட்டும் காப்பியம் சிலப்பதிகாரம்; உலகில் இவ்வளவு சிறப்புப் பெற்ற இலக்கியங்கள் மிகக் குறைவு.

அத்தகைய சிறப்புக்குரிய இளங்கோவடிகளுக்குச் சிலை எழுப்புவதால் நாம் பெருமையுறுகிறோம்.

இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டின்போது தமிழறிஞர்களுக்குச் சிலை எழுப்பினோம்; அதுபற்றி இழித்தும் பழித்தும் சொன்னவர்கள் உண்டு.

உலகின் ஏனைய நாடுகளில் பெருமைக்குரியவர்களுக்கெல்லாம் சிலை வைத்து மகிழ்ச்சியடைகின்றனர்.

சென்ற நூற்றாண்டுவரையில், இலக்கியம் -- வரலாறு -- இன்ன பிற சிறப்புக்களை விளக்கிக் காட்டும் அளவுக்குச் சிறப்பானவர்களுக்கு -- மற்ற நாடுகளில், சதுக்கத்திற்குச் சதுக்கம் -- பூங்காவுக்குப் பூங்கா சிலை வைத்திருப்பதை நாம் காணலாம்.

அந்த வகையில், 1,800 ஆண்டுகளுக்குமுன் வாழ்ந்த பெருமைக்குரிய தமிழ்ப் புலவர் இளங்கோவடிகளுக்குச் சிலை அமைப்பதில் நாம் ஒவ்வொருவரும் பூரிப்படைய வேண்டும்.

உலகத்தில் மூவாயிரத்திற்கு மேற்பட்ட மொழிகள் இருந்தாலும், தமிழ் -- இல்லத்தின் -- ஹீப்ரு -- கிரேக்கம் -- சீனம் போன்ற சில மொழிகள்தான், 'உயர் தனிச் செம்மொழி' எனும் சிறப்புப் பெற்றவை.

அவற்றுள், கிரேக்கம் -- இலத்தீன் ஆகிய மொழிகள் பேச்சு வழக்கற்று [illegible]ட்டு வழக்கோடு நின்றுவிட்ட[illegible]!

சமஸ்கிருத [illegible]ழி என்றைக்கும் பேச்சு வ[illegible]கிலே இருந்ததில்லை; சமஸ்[illegible]கிருதம், சில பேர் மட்டும் கூடி[illegible] பேச ஏற்பட்ட மொழி; ச[illegible]கிருதம் என்பதற்கே, 'செப்பம் செய்யப்பட்ட மொழி' என்றுதான் பொருள்.

ஆனால், தமிழைத்தான், 'தெய்வத் தமிழ்' என்பார்கள்; தமிழ் ஒன்றுதான் இன்று ஏட்டு வழக்கிலும் -- பேச்சு வழக்கிலும் எள்ளளவும் குறையாமல் இருந்துவருகிறது!

சீன மொழி ஏட்டிலும் பேச்சிலும் இருந்தாலும், வடகோடியிலுள்ள சீனன் பேசுவது தென்கோடியிலுள்ள சீனனுக்குப் புரியாது -- ஏட்டிலுள்ளதுதான் புரியும்!

இளங்கோவன் சிலையை இங்கு திறக்கிறோம் என்றால், 'இந்த நகர், அறிவு வழியில -- ஆற்றல் வழியில் சிறப்புறுகிறது' என்று பொருள்!

தமிழில் பல நூல்கள் அழிந்துவிட்டன! சூழ்ச்சிக்காரர்கள் சிலரால் அழிக்கப்பட்டும் விட்டன!

புறநானூறு --- ஐங்குறுநூறு --- பதிற்றுப்பத்து -- பரிபாடல் போன்ற நூல்கள், தமிழ்நாட்டுப் பழக்க வழக்கங்களைச் சில சிறு குறிப்புக்கள் -- செய்யுட்களால் எடுத்துரைக்கின்றவைகளாகும்.

ஆனால், சிலப்பதிகாரம் ஒன்றுதான் முழுக்க முழுக்கத் தமிழ்நாட்டு நாகரிகச் சிறப்பை -- பண்பாட்டுச் சிறப்பை — வணிகச் சிறப்பை எடுத்துக்கூறும் காவியமாக இருக்கிறது!

சேர மன்னன் பரம்பரையில் பிறந்தாலும், அவர், மூவேந்தர்களையும் காழ்ப்பின்றிப் புகழ்ந்திருக்கிறார்!

இன்பம் -- துன்பம் -- வீரம் என்ற மூன்று தத்துவத்தில், தன் காப்பியத்தை அமைத்திருக்கிறார்!

புகார்க் காண்டத்தில் இன்பத்தையும், மதுரைக் காண்டத்தில் துன்பத்தையும், வஞ்சிக் காண்டத்தில் வீரத்தையும் காட்டுகிறார்!

சிலப்பதிகாரம், மூவேந்தருக்கும் -- மூன்று தமிழ்நாட்டுக்கும் பொதுவானது!

அது, இயல் -- இசை -- நாடகம் என்ற தமிழின் மூன்று கூறுபாடுகளையும் சிறப்பாக எடுத்துக் காட்டும் நூல்.

பண்டைத் தமிழரின் இசை நுணுக்கங்களையெல்லாம் எடுத்துக்காட்டும் ஆதாரமாக இருப்பது சிலப்பதிகாரம்தான்!

நாட்டியக் குறிப்புக்கள் அத்தனையையும் அரங்கேற்றுக் காதையில் மிகத் தெளிவாக விளக்கிக் காட்டியிருக்கிறார்.

நாட்டியத்திற்குள் இலக்கணத்தை, சிலப்பதிகாரம்போல் வடமொழியில் எந்த நூலும் கூறியதில்லை!"

மாதவரத்தில் அண்ணா சிலை

நகரியக் குழுக் கூட்டத்தில் முடிவு

மாதவரம் நகரியக் கூட்டம் 5—11—71-ல் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆர். ஏ. சீதாராமதாஸ் தலைமையில் நடைபெற்றது.

அதுபோது, மாதவரம் நகரியவளைவிற்குள் நிறுவப்படவிருக்கும் மறைந்த மாமேதை பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலையை தமிழக முதல்வர் கலைஞர் அவர்களை அழைத்து திறப்பு விழா நடத்துவதென ஒருமனதாக முடிவு செய்யப்பட்டது.

பேரறிஞர் அண்ணா அவர்களின் சிலை அமைப்புப் பணியினை மேற்கொள்ள கீழ்க்கண்டவர்களைக் கொண்ட குழு ஒன்றும் அமைக்கப்பட்டது:—

தி. சு. இலட்சுமணன் எம்.பி., மா. வெ. நாராயணசாமி எம்.எல்.ஏ., மா. பொ. வேதாசலம், ஏ. ஜெயராஜ், மா. துரைசாமி, பா. மதிவாணன் (நகரிய உறுப்பினர்கள்), பாதர் இபினேசஸ், ஆர். தன்சிங், எம். வேணுகோபால், ஜேம்ஸ் எபிநேசர்.

கொரில்லா போர்ப் பயிற்சி

சீன அதிகாரிகள் தருகிறார்களாம்

ஜெய்ப்பூர், நவ. 9—

இராஜஸ்தானை ஒட்டியுள்ள எல்லைப் பகுதிகளில் பாகிஸ்தான் இராணுவத்தினருக்குச் சீன அதிகாரிகள் போர்ப் பயிற்சி அளிக்கிறார்கள்.

ஏறத்தாழ 20,000 பேருக்குக் கொரில்லா முறையில் போர்ப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

இந்தியா — பாகிஸ்தான் போர் ஏற்பட்டால் இவர்கள் இந்திய எல்லைக்குள் ஊடுருவி வந்து சதி வேலையில் ஈடுபடத் திட்டமிட்டுள்ளனர்; இதற்காகவே சீன அதிகாரிகள் கொரில்லாப் போர் பயிற்சி அளிக்கிறார்கள்.

இராஜஸ்தானின் கங்கா நகரை அடுத்துள்ள பகுதிகளில் பாகிஸ்தான் டாங்கிப் படைகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன; சீனாவிலிருந்து பாகிஸ்தான் வாங்கிய டாங்கிகள் இவை.

ரகிம்யார்கான், பகவல்பூர் பகுதியிலும் பீரங்கிப் படைகள் மறைவிடங்களில் நிற்கின்றன.

'மிரேஜ்' விமானங்களை இயக்க ஈரானில் பயிற்சி

பதின், சிந்து ஆகிய இடங்களில்; பாகிஸ்தான் போர் விமானங்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன.

பாகிஸ்தான் புதிதாக 'மிரேஜ்' விமானங்களை வாங்கியிருக்கிறது; இந்த விமானங்களை இயக்கும் விதம் பாகிஸ்தான் இராணுவத்திற்குத் தெரியவில்லை; இதனால், ஈரான் நாட்டில் பாகிஸ்தான் விமானிகட்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

மாவட்டங்கள் தோறும் காகிதத் தொழிற்சாலைகள்

புளிச்சக் கீரைச் செடியை மூலப் பொருளாகக் கொள்ளக் கூட்டுறவுத் துறையில் திட்டம்

அமைச்சர் சி. பா. ஆதித்தனார் தகவல்

சென்னை, நவ. 10—

"மாவட்டத்துக்கு ஒரு காகிதத் தொழிற்சாலை வீதம் அமைப்பதற்குக் கூட்டுறவுத் துறை முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது.

"காகிதத் தொழிற்சாலைக்கு (காகிதம் செய்தல்) தேவையான மூலப் பொருள் தமிழ்நாட்டிலேயே உற்பத்திச் செய்யப்படும்.

"புளிச்சக் கீரைச் செடியிலிருந்து காகிதம் உற்பத்திச் செய்ய முடியும் எனக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது; இந்தச் செடி, தமிழ்நாட்டில் நன்கு பயிராகக்கூடியது; எனவே, இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு தமிழ்நாட்டில் மாவட்டங்கோறும் காகிதத் தொழிற்சாலையைத் தொடங்கி -- அந்தத் தொழிலுக்கு வேண்டிய புளிச்சக் கீரையை அந்த மாவட்டங்களிலேயே பயிரிட்டு உற்பத்திச் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படவிருக்கின்றன"

என்று, கூட்டுறவுத் துறை அமைச்சர் சி. பா. ஆதித்தனார் அவர்கள் தெரிவித்தார்.

"சுமார் 12 அடி உயரத்திற்கு வளரக்கூடிய இந்தச் செடி, ஏக்கர் ஒன்றுக்கு 40 டன் அளவில் பயிராகும்; அதன் மூலம் விவசாயிக்கு மிக நல்ல வருமானம் கிடைக்கும்" என்றும் அவர் கூறினார்.

தமிழ்நாடு கூட்டுறவுக் கழகத்தின் சார்பில், அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவை, தீவுத் திடலுக்கு அருகில் உள்ள அதன் அலுவலகத்தில் அமைச்சர் தொடங்கி வைத்தார்.

புதிய ஒழுங்கு முறைகள்

அவ்விழாவில் அமைச்சர் மேலும் பேசுகையில், 'கூட்டுறவு நில வள வங்கிகள் நன்கு செயல்பட புதிதாகப் பல சட்டத் திருத்தங்களைத் தமிழக அரசு செய்திருப்பது போல், கூட்டுறவுப் பண்டகசாலைகள் (ஸ்டோர்ஸ் -- பண்டகசாலைகள் நுகர்வோர் சொசைடிகள்) மேலும் ஒழுங்காக நடைபெறுவதற்கு வகை செய்யப்படும்' என்றார்.

"கூட்டுறவுப் பண்டகசாலைச் சட்டத்தில் தகுந்த முறையில் புதிதாக ஒழுங்கு விதிகள் செய்யப்படும்" என்றும் தெரிவித்தார்.

"இந்தியாவில் கூட்டுறவுத் துறையில் தமிழகம் மூன்றாவது இடத்தில் இருந்தது; இப்போது முதல் இடத்தை அடைந்திருக்கிறது. முதல் இடத்தைப் பிடித்துள்ள கூட்டுறவுத் துறை, மீண்டும் கீழ்நோக்கிவிடாதபடி கண்காணிப்புடன் இருக்க வேண்டும்" என்று எச்சரித்தார்.

"இனிமேல் கூட்டுறவுத் துறை, வெளி உதவியை நம்பி இருக்கக் கூடாது; வெளி உதவிகளை எதிர்பார்க்கலாகாது; தனது நிதி நிலையைப் பெருக்கிக்கொள்ளுவதற்கு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்.

என். வி. நடராசன்

விழாவிற்குத் தலைமைவகித்த தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. என். வி. நடராசன் அவர்கள் பேசுகையில், 'கூட்டுறவுத் துறையில் முன்பு இருந்த அத்தனைக் குறைபாடுகளும் இன்னும் நீங்கி விட்டதாகச் சொல்வதற்கில்லையாயினும், 90 சதவிகிதம் சீரமைக்கப்பட்டிருக்கிறது' என்றார்.

கூட்டுறவு வாரத்தையொட்டி, சிறப்பு மலர் வெளியிடப்பட்டது.

கூட்டுறவுத் துறைப் பதிவாளர் திரு. பெல்லியப்பா பேசுகையில், சிறு விவசாயிகளுக்குக் கூட்டுறவுத் துறை மூலம் இன்னும் அதிகக் கடன் வசதி அளிக்க வேண்டும்' என்றார்.

தமிழ்நாடு கூட்டுறவுக் கழகத் தலைவர் திரு. பி. நடேசன் அனைவரையும் வரவேற்றார்.

கூட்டுறவு வார உறுதி மொழியை, துணைத் தலைவர் திரு. கொளத்தூர் கோதண்டம் படித்தார்.

போர் மூண்டால் சீனு தலையிடுமா?

யாகியா கானின் இருவேறு கூற்றுக்கள்

புதுடில்லி, நவ. 9—

"பாகிஸ்தான்மீது இந்தியா தாக்குதல் நடத்துமானால் சீனு தலையிடும்" என்று யாகியா கான் கூறினார்.

கொலம்பியா வானொலி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் யாகியா கான் இக்கருத்தைத் தெரிவித்ததாகப் பாகிஸ்தான் வானொலி கூறியது.

அமெரிக்கப் பத்திரிகையான 'நியூஸ் வீக்' பேட்டியில் யாகியா கான் தெரிவித்த கருத்துக்கு இது முரண்பட்டதாக உள்ளது; 'சீனு பாகிஸ்தானுக்கு எல்லா உதவியும் அளிக்கும்; ஆனால் சீனு தலையிடாது' என்று அப்பேட்டியில் யாகியா கான் கூறியிருந்தார்.

பீகிங்குக்குப் பாகிஸ்தான் குழு சென்று திரும்பிய பிறகு இந்த அறிவிப்பு வெளியாகியிருக்கிறது; ஆனால், சீனுவுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தை பற்றி எதுவும் கூற அவர் மறுத்துவிட்டார்.

பாகிஸ்தான் கூற்றை சீனு நம்பியதா?

இலண்டன், நவ. 9—

சீனு -- பாகிஸ்தான் பேச்சு வார்த்தை பற்றி இலண்டனிலிருந்து வெளியாகும் 'டைம்ஸ்' இதழ் எழுதியிருப்பதாவது:—

"பாகிஸ்தானின் பேச்சை சீனு நம்பவில்லை; அதனால்தான், பேச்சுவார்த்தைக்குப் பிறகு எந்தவிதமான அறிக்கையும் சீனு பகிரங்கமாக வெளியிடவில்லை.

"இந்தியா -- பாகிஸ்தான் விவகாரத்தில் தலையிட சீனு விரும்பவில்லை.

"பாகிஸ்தான் தூதுக் குழுவை வரவேற்ற ஒரே நாடு சீனுதான்; மற்ற எந்த நாடும் பாகிஸ்தானை வரவேற்கவில்லை; இதிலிருந்தே, பாகிஸ்தானின் பலவீனம் தெரிகிறது."

சீனு நம்பிவிட்டதாம் -- பூட்டோ வெத்துவேட்டு

'புனித பூமி'யில் போர் மேகம் சூழ்ந்துவிட்டதாம்

இராவல்பிண்டி, நவ. 9—

'புனித பூமியான பாகிஸ்தானின்மீது போர் மேகங்கள் சூழ்ந்துவிட்டன; இது கலைந்து செல்லுமா என்று நிச்சயமாகக் கூறமுடியாது"

என்று, சீனுவுக்குத் தூது சென்ற பாகிஸ்தான் குழுத் தலைவர் ஜுல்பிகர் அலி பூட்டோ, செய்தியாளர்களிடம் கூறியிருக்கிறார்; அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:—

"சீனுவுடன் நான் நடத்திய பேச்சுவார்த்தை வெற்றி பெற்றுவிட்டது; எங்கள் கோரிக்கையை, 'உண்மையானது' என்று சீனு நம்பிவிட்டது."

சீனுவிலிருந்து திரும்பிய பூட்டோ சர்வாதிகாரி யாகியா கானைச் சந்தித்து, பேச்சுவார்த்தை பற்றிய விவரங்களைக் கூறியிருக்கிறார்.

ஒரு சிண்டிகேடருக்குத் தூக்கு -- மற்றும் மூவருக்கு ஆயுள் தண்டனை

தா. கிருட்டினன் சிறிய தந்தையார் கொலை வழக்கில் தீர்ப்பு

மதுரை, நவ. 8—

நாடாளுமன்ற தி. மு. க. உறுப்பினர் தா. கிருட்டினன் அவர்களின் சிறிய தகப்பனார் தங்கையா அவர்களைக் கொலை செய்த சிண்டிகேடர்களில் ஒருவருக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது.

மூவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

இராமநாதபுரம் மாவட்ட செஷன்சு நீதிபதி, இத்தீர்ப்பை வழங்கினார்.

திரு. தங்கையா அவர்கள் மானாமதுரை ஊராட்சி ஒன்றியத் துணைத் தலைவர் தேர்தலுக்காக வந்து கொண்டிருந்தபோது, 1970 ஆக. 31-ம் நாளன்று சிவகங்கைச் சாலையில் வழி மறித்துக் கொல்லப்பட்டார்.

கொலைகாரர்கள் அவரது உடலைக் கோவில் ஒன்றுக்குப்பின் மறைத்து வைத்தனர்.

இந்த வழக்கை நீதிபதி எம். எஸ். சங்கரலிங்கம் விசாரித்து தீர்ப்பளித்தார்.

'எதிரிகள் குற்றவாளிகள்' என்று கண்ட நீதிபதி அவர்கள் முதல் எதிரி முனியாண்டிக்குத் தூக்குத் தண்டனை விதித்தார்; மற்ற மூவரான சின்னமுத்து, நல்லதம்பி, முத்து ஆகியோருக்கு ஆயுள் தண்டனை விதித்தார்.

பொள்ளாச்சி வாக்குப் பதிவு -- மதுக்கடைகள் மூடப்படும்

கோவை, நவ. 9—

பொள்ளாச்சித் தேர்தலில் வாக்குகள் எண்ணப்படும் நாளாகிய நவ. 14-ந் தேதியன்று பிற்பகல் 3-மணியிலிருந்து மதுபானக் கடைகளை மூடிவிடுமாறு அரசு உத்தரவிட்டுள்ளது.

வாக்குப் பதிவு நவ. 13-ந் தேதி நடைபெறுகிறது.

தொழிலாளர்கள் வாக்குப் பதிவு செய்வதற்கு வசதியாக நவ. 13-ந் தேதி விடுமுறை அளித்து அதற்குப் பதில் மற்றொரு நாள் வேலை செய்யச் சொல்லுமாறு தொழிற்சாலை நிர்வாகிகளுக்குத் தாக்கீது அனுப்பப்பட்டுள்ளது.

இலங்கையில் மற்றொருநெருக்கடி

இலங்கையரல்லாதாருக்கு சொத்து வரம்பு

கொழும்பு, நவ. 9—

"இலங்கைக் குடிமக்கள் அல்லாதவர்களின் சொத்துரிமைக்கு வரம்பு கட்ட நாடாளுமன்றத்தில் சட்டம் கொண்டு வரப்படும்"

என்று இலங்கைத் தலைமையமைச்சர் சிரிமாவோ பண்டார நாயகா கூறினார்.

ஐக்கிய முன்னணி அரசின் நாடாளுமன்றக் குழுவின் கூட்டத்தில் பேசுகையில், 'நிலவுடைமைக்கு உச்சவரம்பு நிர்ணயிப்பது சம்பந்தமான அரசின் கருத்துக்கள் உரிய நேரத்தில் அறிவிக்கப்படும்' என்றார்.

"சம்பளங்களுக்கு மேல்வரம்பு நிர்ணயிக்க ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது" என்றும் அவர் தெரிவித்தார்.

பாகிஸ்தான் தலைநகரில் இருட்டடிப்பு ஒத்திகை

இஸ்லாமாபாத், நவ. 10—

பாகிஸ்தான் தலைநகரான இஸ்லாமாபாதிலும் -- இராவல்பிண்டியிலும் நேற்று முன்தினம் இருட்டடிப்பு ஒத்திகை நடைபெற்றது.

கராச்சி உட்பட மற்ற நகரங்களிலும் இதுபோன்று ஒத்திகைகள் நடைபெற்றிருக்கின்றன.

சென்னை 34 ல் உள்ள இந்து சமய அறக்கட்டளைகள் ஆட்சித் துறை ஆணையாளர் முன்பாக

மனு எண்: 358/71

பரம்பரை தர்மகர்த்தர்,
ஸ்ரீ வேணுகோபாலஸ்வாமி ஆலயம்,
கணபதி கிராமம்,
கோயமுத்தூர் வட்டம்,
கோயமுத்தூர் மாவட்டம்.
—மனுதாரர்

கோயமுத்தூர் மாவட்டம் கோயமுத்தூர் வட்டம் கணபதி கிராமம் ஸ்ரீ வேணுகோபாலஸ்வாமி கோயில் விஷயமாக:—

கோயமுத்தூர் மாவட்டம் கோயமுத்தூர் வட்டம் கணபதி கிராமம் ஸ்ரீ வேணுகோபாலஸ்வாமி கோயிலுக்குச் சொந்தமாகக் கோயமுத்தூர் வட்டம் கணபதி கிராமத்தில் சர்வே எண் 340-ல் உள்ள நிலம் ஏக்கர் 4.68 செண்டில், ஏக்கர் 3.68 சென்ட் விஸ்தீரணம் உள்ள நிலத்தினை ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 20,000 எனத் தொடக்க விலையாகக் கொண்டு பொது ஏலத்தில் விற்பனை செய்ய அனுமதி வேண்டி 1959-ம் வருடத்திய இந்து சமய அறக் கட்டளைகள் ஆட்சித் துறை சட்டம் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 34-வது பிரிவின் கீழ் செய்துகொண்ட மனு:—

நோட்டீஸ் மனு எண் 358/71 டி. 1 நாள் 1—11—71

மேற்படி மனு குறித்து சென்னை-34, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலையிலுள்ள தமது அலுவலகத்தில், இந்து சமய அறக்கட்டளைகள் ஆட்சித்துறை ஆணையாளர் அவர்களால் 18—12—1971 அன்று பிற்பகல் 2 மணி அளவில் விசாரணை நடத்தப்படும்.

2. மேற்படி மனு குறித்து கருத்துரைகளோ, மறுப்புரைகளோ எவையேனும் இருப்பின் அவற்றை எழுத்துமூலமாக 13—12—1971 அன்றோ அல்லது அதற்கு முன்போ இந்த அலுவலகத்திற்கு வந்து சேரும்படி அனுப்பிவைக்க வேண்டும்.

3. முறையீடுகள் எவையேனும் இருப்பின் அவற்றை நேரிலும் விசாரணையின்போது தெரிவித்துக் கொள்ளலாம்.

கோ. நந்தகோபால்
ஆணையாளருக்காக

தமிழையே போர்க்களக் கருவியாக்க நினைத்தால்....

மொழியால்--இன உணர்வால் ஒன்றுபடுவோம்

இறுதி வெற்றி தி.மு.க.-விற்கே என்பதை உணருவீர்

இளங்கோவடிகள் சிலை அமைப்புப் பற்றி இழித்தும் பழித்தும் எழுதுவோருக்கு ம. பொ. சிவஞானம் எச்சரிக்கை

சென்னை, நவ. 10—

"'இளங்கோ துறவி--அவர் சிலையில் வாள் எதற்கு?' என்று ஒரு பத்திரிகை எழுதியிருந்தது; துறவி என்றால், அந்தப் பத்திரிகை நினைப்பதுபோல், இளங்கோவடிகள் பண்டாரம் -- பரதேசி அல்லர்! 'தமிழா -- மணிமுடியா' என்று கேட்டு முடிதுறந்த முடியரசுக்குரிய செல்வன்!

"'வில்லேருழவர் பகை கொளினும் கொள்ளற்க -- சொல்லேருழவர் பகை' என்று வள்ளுவர் கூறினார்: 'என் வாள் முனையை விட பேனா முனை வலிமையானது' என்று நெப்போலியன் கூறியதாகச் சில பட்டதாரிகள் சொல்வதைக் கேட்டுக் கேட்டுப் புளித்துவிட்டது; நெப்போலியனுக்கு முன்பே வள்ளுவர் இதைச் சொல்லியிருக்கிறார் – 'வாள் முனையைவிடக் கோல் முனை வலிமையானது' என்று!

"வாள் துறக்கப்படுமானால், செங்கோல் அல்லது செந்தமிழ்க் கோல் இருக்கும்; வாள் பிடிக்கத் தெரிந்தவர்களுக்கும் -- வாள் பிடித்து எழுதுகோல் பிடிக்கத் தெரிந்தவர்களுக்கும் இது தெரியும்! 'வாள்' பிடிக்கத் தெரியாமல் 'வால்' பிடிப்பவர்களுக்கு இது தெரியாது!

"ஆட்சியில் இருப்போர்மீது நிர்வாக ரீதியாகக் குறைகளை எழுதட்டும்--அது சனநாயகம்--அதை வரவேற்கிறோம்.

"ஆனால், தமிழுக்கு வாழ்வளித்தவர்களுக்குச் சிறப்புச் செய்யும்போது, வேண்டுமென்றே தமிழராகப் பிறந்தவர்கள் கேலி செய்தால்--பத்தினிக்குக் கலைக் கோயில் கட்டியவனுக்குச் சிலை சமைப்பதைக் கேலி செய்தால், வேங்கடத்துக்கு அப்பால் இருப்பவன் சிரிப்பான் -- இங்குள்ளவன் சீறி எழுவான்!

"இங்கே தமிழ்க் கவிஞனுக்குச் சிலை எழுப்புகிறோம் -- இந்தியக் கவிஞனுக்குச் சிலை எழுப்புகிறோம்; காளிதாசர், வால்மீகி, துளசிதாசர், மீரா போன்றவர்கள்தான் இந்தியக் கவிஞர்களாகக் கருதப்படுகின்றனர்; இந்திராவுடன் தோழமையுள்ளவர்கள், 'வள்ளுவருக்கு ஒரு சிலையை டில்லியில் வையுங்கள்' என்று எழுதியிருந்தால், அவர்களுடைய எழுத்துக்களை அணைத்துக் கொள்வோம்.

"வணிகர் குலத்தில் தோன்றிய கண்ணகி, செங்கோல் கொடுங்கோலாக மாறியபோது -- கோவலன் உயிருக்குப் பாதுகாப்பு இல்லாமல் போனபோது, தன்னந்தனியாக நின்று மதுரை ஆட்சியை -- அரசை -- நகரை அழித்து நின்றாள் என்றால், அந்த வீரத்திற்கு இணை ஏது? வீரத்தைக் காட்டும் வாய்ப்புக் கிடைத்தால், 'வருணம் பாராது தமிழினம்' என்பதற்கு, வணிகர் குலத்தில் தோன்றிய கண்ணகியே சான்று!

"இலாப -- நட்டக் கணக்குப் பார்க்கும் வணிகர் குலத்தில் தோன்றிய கண்ணகிக்கு இருந்த வீரம், இலாப -- நட்டக் கணக்குப் பார்க்கும் வாணிப நோக்கம் கொண்ட அவர்கட்கு ஏனோ இல்லை! அந்த வீரம் இருந்திருந்தால், வாள் பற்றிக் குறை கூறி எழுதுவார்களா?

"கண்ணகிக்கும் -- கோவலனுக்கும் ஆரத்தி எடுக்கின்றபோது, இளங்கோவடிகளுக்கு ஒரு குறை இருந்தது; கரிகாலன் வடக்கே படை நடத்திச் சென்று இமயம்வரை வென்று இமயத்திற்கு அப்பாலும் செல்ல நினைத்தான் -- இயற்கை இடம் தரவில்லை; எனவே, இமயத்தின் உச்சியிலே புலிக் கொடியைப் பொறித்துவிட்டுத் திரும்பினார்; அடிகளார் வருந்துகிறார்; அப்படி வருந்துவதன் மூலம், 'இமயத்தின் உச்சியைக் கடந்து அப்பால் போகும் பிள்ளைகளைப் பெற்றெடுங்கள்' என்று கண்ணகியையும் -- கோவலனையும் வாழ்த்துகிறார் இளங்கோ! 'தமிழினத்திலே எந்த வருணமானாலும், தாய்நாட்டுக்கு இழுக்கு நேர்ந்தால் போராட வேண்டும்' என்பதுதான் அதன் கருத்து! அப்படிப்பட்ட வீர உணர்வுடைய இளங்கோவுக்குச் சிலை எடுக்காமல் வேறு யாருக்கு எடுப்பது?

"அண்ணனுக்குரிய முடியை அபகரிக்கமாட்டேன் -- என்று அவைக்களத்திலே சபதம் செய்து -- துறவுகோலம் பூண்டு -- அண்ணனுக்கு அரியணை தந்தார் இளங்கோ! 'தமிழ் மாநிலத்திற்கு நன்மை செய்ய இயலாவிடில், பதவி துறப்போம்' என்று இன்று கலைஞர் சொல்கிறார் என்றால், அந்தத் துணிவு, 'அண்ணனுக்காக முடி துறப்பேன்' என்று நிமித்தகன் முன்பு சூளுரைத்த இளங்கோவடிகள் தந்த துணிவு -- இளங்கோவடிகள் தந்த சொத்து!

"அண்ணா கல்லறைக்குப் போகும் வழியில், கம்பர் சிலையும் -- இளங்கோ சிலையும் பக்கத்தில் பக்கத்தில் இருக்கிறது; இதனால், 'இளங்கோவும் -- கம்பரும் துவாரபாலகர்களா' என்று நையாண்டி செய்து எழுதியிருக்கிறார்கள்; துவாரபாலகரைப் போன்று கம்பரையும் -- இளங்கோவையும் அவர்கள் ஏன் பார்க்க வேண்டும்? துவாரபாலகர்கள் என்ன -- இவர்களைப்போல் காப்பியம் செய்து தந்திருக்கிறார்களா? துவாரபாலகரைப் பற்றி அவர்களுக்குத்தான் தெரியுமா? இல்லை -- அப்படியெல்லாம் சொல்லி வைத்தவர்களுக்குத்தான் அதைப் பற்றி தெரியுமா? அவர்கள் சிந்திப்பது இனியேனும் உயர்வுடையதாக இருக்கட்டும்!

"கம்பர் சிலையும் -- இளங்கோ சிலையும் அண்ணா கல்லறைக்கு முன் ஏன் வைக்கப்பட்டிருக்கிறது என்றால், 'அண்ணாவை வழிபடுமுன் இளங்கோவை வழிபட்டு -- கம்பரை வழிபட்டு -- அவர்கள் இருவரும் வளர்த்த தமிழைக் காத்தவரை பின்பு வணங்கப் போ' என்பதுதான் பொருள்! இது தெரியாமல் அவர்கள் உளறுவது விசித்திரமிக்கது!

"பேரறிஞர் அண்ணா அவர்கள், நவீன இலக்கிய கர்த்தாக்களுக்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர்! நவீன இலக்கியங்களுக்குப் புதிய திருப்பம் கொடுத்தவர்! அத்தகைய இலக்கிய கர்த்தா -- நாடக ஆசிரியர் -- கதாசிரியர் இங்கே 'கோயில்' கொண்டுள்ளார்! நவீன கர்த்தாவுக்கு அஞ்சலி செலுத்த உள்ளே நுழையுமுன், பழைமைக்கு முதலிடம் தந்து -- அஞ்சலி செலுத்திப் போகவேண்டும்! 'புதுமையை நினைக்குமுன் பழைமையின் பெருமையை நினைத்துச் செயல்படு' என்னும் தத்துவத்தைக் காட்டத்தான், இங்கே, இளங்கோ சிலையும் -- கம்பர் சிலையும் வைக்கப்பட்டிருக்கிறது!

"என்னோடும் -- கழகத்தோடும் -- தோழமைக் கட்சியினரோடும் அவர்கள் அரசியல் போர் நடத்தட்டும்! ஆனால், தமிழைப் போர்க்களக் கருவியாக்கிவிட வேண்டாம்! தமிழையே போர்க்களக் கருவியாக்க நினைத்தால் எப்போதும் வெற்றி தி. மு. கழகத்திற்கே! தமிழால் ஒன்றுபடுவோம் -- இன உணர்வோடு ஒன்றுபடுவோம்!

"ஷேக்ஸ்பியர் -- ஷெல்லி ஆகியோருக்கு நாம் சிலை வைக்காவிட்டால், அந்த நாட்டுக்குரியவர்கள் வைத்துக்கொள்வார்கள்! காளிதாசனுக்கும் -- துளசிதாசருக்கும் நாம் சிலை வைக்காவிட்டால், வட மாநிலத்துக்காரர்கள் வைத்துக் கொள்வார்கள்! ஆனால், இளங்கோவடிகளுக்கு நாம் சிலை வைக்காவிட்டால், வேறு யார் வைப்பது?"

(இளங்கோவடிகள் சிலைத் திறப்பு விழாவில்)

அமெரிக்காவில் கலைஞர்

அரசாங்கச் சார்பில் சிறப்பு விருந்து

வாஷிங்டன், நவ. 10—

அமெரிக்கச் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டிருக்கும் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு, அமெரிக்க அரசு நாளை சிறப்பு விருந்து ஒன்றை அளிக்கும்.

கலைஞர் அவர்கள் இன்றும் நாளையும், இந்தியத் தூதுவர் ஜா அவர்களுடன் தங்கியிருப்பார்.

நவம்பர் 12, 13-ம் நாட்களில் பால்டிமோருக்குச் சென்று கண்ணுக்குச் சிகிச்சை மேற்கொள்ளுவார்.

முதல்வர் அவர்கள், இத்திங்கள் 14-ம் நாள் வாஷிங்டனிலுள்ள தமிழ்ப் பெருமக்களைச் சந்திக்கக் கூடும்.

மாராட்டிரத்தில் சேரி ஒழிப்பு

திட்டத்துக்கு ரூ. 400 கோடி தேவையாம்

புனா, நவ. 10—

"மகாராஷ்டிரத்தில் பம்பாய், புனா, நாகபுரி, ஔரங்காபாத், ஷோலாப்பூர் ஆகிய நகரங்களில் சேரிகளில் மொத்தம் சுமார் 16 இலட்சம் மக்கள் வாழ்கின்றனர்; இந்தச் சேரி ஒழிப்புத் திட்டத்துக்கு ரூ. 400 கோடி செலவாகும்; பம்பாய்க்கு மட்டும் ரூ. 200 கோடி தேவைப்படும்" என்று மாராட்டிர வீட்டு வசதித் துறை அமைச்சர் திருபுதே கூறினார்.

கழகத் தோழரின் மகன் கொலை

கைகள் துண்டிக்கப்பட்டு பிணமாக மிதந்த கோரக் காட்சி

அருப்புக்கோட்டையில் நிகழ்ந்த வேதனை மிகுநிகழ்ச்சி -- துப்புத் துலக்கக் காவல் துறையின் தீவிரம்

அருப்புக்கோட்டை, நவ. 9—

கழகத் தோழரும் நகராட்சி உறுப்பினருமான லெ. வேலுசாமி அவர்களின் மூன்றாவது மகன் அருப்புக்கோட்டை தும்பைக் குளம் அருகில் உள்ள கிணற்றில் குளிப்பதற்குச் சென்றான்; குறிப்பிட்ட நேரம்வரையில் திரும்பிவராததால் அவனுடைய பெற்றோர் தேடும் முயற்சியில் ஈடுபட்டனர்; பையனைக் காணவில்லை.

நான்காவது நாளன்று காலை 9 மணியளவில், நீர் இல்லாமல் வறண்டு கிடந்த தும்பைக்குளத்தில் பெய்த பெருமழையால் தண்ணீர் பெருக்கெடுத்து வந்தது; அந்த நேரத்தில் காணாமற்போன சிறுவனின் பிணம் -- இரண்டு கரங்களும் துண்டிக்கப்பட்ட நிலையில் மிதந்துவந்தது.

இந்தச் செய்தி பரவியதும் கழகத்தோழர்களும -- தாய்மார்களும் -- பொதுமக்களும் தும்பைக்குளத்தில் கூடி சிறுவனின் கோரமான சாவைக் கண்டு கண்ணீர் வடித்தனர்.

அண்ணாவின் பெயரை வைத்து -- அன்புடன் வளர்த்து 11-வயது நிரம்பிய தனது செல்வனின் கோர மரணத்தைக் கண்டு தோழர் வேலுச்சாமி வேதனை தாங்காது துடிதுடித்தார்.

அதுபோது இராமனாதபுரம் மாவட்ட தி. மு. க. அவைத் தலைவர் சிவ. சண்முகசுந்தரனார் -- அவர்தம் துணைவியார் சிவகாமி அம்மையார், நகர தி. மு. க. செயலாளர் பி பி. என். நல்லதம்பி, நகரமன்றத் தலைவர் எஸ். சுப்பையா, நகரமன்ற ஆணையாளர் புகழும்பெருமாள் உட்பட அதிகாரிகள் -- சட்டமன்ற உறுப்பினர் சௌடி சுந்தரபாரதி ஆகியோர் தோழர் வேலுச்சாமிக்கு ஆறுதல் கூறினார்கள்.

மாவட்டச் செயலாளர் திரு. எஸ். எஸ். தென்னரசு எம்.எல்.சி., காரியாப்பட்டி ஊராட்சி ஒன்றியப் பெருந் தலைவர் வே. தங்கப்பாண்டியன் எம்.எல்.சி., வட்டச் செயலாளர் மு. சுந்தரராசன் ஆகியோரும் திரு. வேலுச்சாமியிடம் தங்களின் இரங்கலைத் தெரிவித்துச் சென்றனர்.

சிறுவனை வெட்டிக் கொன்ற கொடியவர்களைக் கண்டுபிடிக்க துப்புத் துலக்க நாய் வரவழைக்கப்பட்டது; அதனை அடுத்து காவல் துறையினர் தீவிர புலன் விசாரணை செய்துவருகின்றனர்.

பம்பாய் தோழர்களின்

சிறப்புமிக்க வழியனுப்பு

பம்பாய் -- மான்கூர்டு தி. மு. க. சார்பில், கலைஞருக்கு, 8-11-71 இரவு மாபெரும் வழியனுப்புக் கூட்டம் நடத்தப்பட்டது.

மேடை மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது; கூட்டம் நடந்த இடம் முழுவதும் ஒரு பர்லாங் தூரம்வரையில் நீள் வண்ண மின் விளக்குகள் அமைக்கப்பட்டிருந்தன.

ஐம்பதாயிரத்திற்கு மேற்பட்ட பொதுமக்கள் கலைஞர் பேச்சைக் கேட்கக் கூடியிருந்தனர்.

இவ்வழியனுப்பு விழாவுக்குப் பம்பாய் தி. மு. க. செயலாளர் எஸ். தியாகராசன் தலைமை வகித்தார்.

அமைச்சர்கள் சத்தியவாணி முத்து -- அன்பில் தர்மலிங்கம் ஆகியோர் பேசினர்.

இறுதியில் கலைஞர் நன்றி தெரிவித்துப் பேசினார்.

இவ்விழாவுக்கு வந்ததுபோல் இதுவரை இவ்வளவு கூட்டம், இதற்முன் எந்த நிகழ்ச்சிக்கும் வந்ததில்லை என்று பலர் பேசும் போது குறிப்பிட்டார்கள்.

இந்தியா -- சீன நட்புறவு

இந்திரா காந்தி காட்டும் ஆர்வம்

பேச்சு நடத்த பிரான்சு முன்வருமா?

பாரிஸ், நவ. 9—

"இந்தியாவுக்கும் – சீனவுக்குமிடையே எல்லைப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண்பதற்கு முன்னமேயே சீனவுடன் தூதுவர் உறவு மீண்டும் ஏற்படுத்திக்கொள்ள இந்தியா தயாராக இருக்கிறது" என்று தலைமையமைச்சர் இந்திரா காந்தி இங்கு செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

"பிரச்சினைக்கு உட்பட்டிருக்கும் அக்சாய்சின் பகுதி சம்பந்தமாக விவாதம் நடத்தித் தீர்வு காணலாம்" என்றும் தலைமை அமைச்சர் குறிப்பிட்டார்.

"இரு நாடுகளுக்கிடையேயும் சுமூக உறவை ஏற்படுத்த பிரான்சு முன்வந்தால் அது ஏற்றுக் கொள்ளப்படுமா?'

என்று கேட்கப்பட்டதற்கு திருமதி இந்திரா காந்தி பதிலளித்ததாவது:—

"தூதுவர்களைப் பரிமாறிக்கொள்வதில் எங்களுக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை; இது நடைபெறும் என்றே நம்புகிறோம்; இத்துறையில் பிரெஞ்சு அரசு உதவ முடியுமானால், அதற்கும் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை."

கலைஞரிடம்

அளிக்கப்பட்ட நூல்கள்

சென்னை, நவ. 10—

ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன், உலக நீதி, வெற்றிவேற்கை, மூதுரை, நல்வழி, நன்னெறி, நீதி நெறி விளக்கம், நீதி வெண்பா, அறநெறிச்சாரம் ஆகிய பத்து நீதி நூல்களின் மூலமும் -- அவற்றின் ஆங்கில மொழிபெயர்ப்புக்களும் கொண்ட புத்தகங்கள் நேற்று முன்தினம் முதல்வரிடம் கொடுக்கப்பட்டன.

தமிழகத்திலுள்ள நீதி நூல்களைப் பற்றி அறிய ஆர்வமுள்ள அமெரிக்கர்களுக்குக் கொடுப்பதற்காக இப்புத்தகங்கள் சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகத்தின் சார்பில் கொடுக்கப்பட்டன.

கள்ள சந்தையில் உருக்கு விற்பனை

தடுக்க மத்திய அரசு நடவடிக்கை

புதுடில்லி, நவ. 10—

உருக்கில் கள்ள மார்க்கெட் இல்லாமல் தடுப்பதில் மத்திய புலன் விசாரணைப் போலீசுப் பிரிவைப் பயன்படுத்திக்கொள்வது என்று மத்திய அரசு முடிவு செய்திருக்கிறது.

கல்கத்தா, சென்னை, பம்பாய், டில்லி ஆகிய நகரங்களில் உள்ள இருப்பு -- உருக்குக் சட்டுப்பாட்டு மண்டல அதிகாரிகள் உருக்குச் சரியானபடி பயன்படுத்தப்படுகிறதா என்பதைக் கண்காணித்து வருகிறார்கள்; ஆனாலும் அவசியமான நேரத்தில் மத்திய புலன் விசாரணைப் போலீசாரைப் பயன்படுத்திக்கொள்வார்கள்.

எதற்காக உருக்கைக் கொள்முதல் செய்கிறார்களோ அது தவிர வேறு காரியங்களுக்காக அதைப் பயன்படுத்துவது இன்றியமையாச் சட்டப்படி குற்றமாகும்.

தூத்துக்குடித் திட்டம்

விரைவுபடுத்த மத்திய அமைச்சர் நடவடிக்கை

வ. உ. சிதம்பரனார் பெயர் சூட்ட யோசனை

எட்டயபுரம், நவ. 10—

"தூத்துக்குடித் துறைமுகப் பணியைத் துரிதப்படுத்துவதற்காக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் -- காண்டிராக்டர்கள் ஆகியோரின் கூட்டம் ஒன்றைக் கூட்ட மத்திய போக்குவரத்துத் துறை அமைச்சர் திட்டமிட்டிருக்கிறது"

என்று மத்திய துணையமைச்சர் கே. எஸ். இராமசாமி அறிவித்தார்.

"தூத்துக்குடித் துறைமுகத்துக்கு வ. உ. சிதம்பரனார் அவர்களின் நினைவாக, 'வ. உ. சி. துறைமுகம்' எனப் பெயர் வைக்கப்படலாம்" என்றும் அவர் தெரிவித்தார்.

"துறைமுக எஸ்டேட்டிற்குள் இருக்கும் துவக்கப் பள்ளியின் நிர்வாகத்தை மத்திய அரசு மேற்கொள்ளவிருக்கும்" என்ற தகவலையும் அமைச்சர் வெளியிட்டார்.

பருவமழை தந்த பலன்

எல்லா மாவட்டங்களிலும் நல்ல மகசூல்

எட்டயபுரம், நவ. 9—

"நல்ல பருவ மழை காரணமாக இவ்வாண்டு எல்லா மாவட்டங்களிலும் நல்ல மகசூல் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது"

என்று வேளாண்மை அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் அவர்கள் தெரிவித்தார்; அவர் மேலும் கூறியதாவது:—

"தமிழ்நாட்டில் இரண்டு இலட்சம் ஏக்கர்களில் தீவிரப் பருத்திச் சாகுபடித் திட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்படுகிறது; அதன்படி, நெல்லை மாவட்டத்தில் 50,000 ஏக்கர்களிலும், பாக்கி கோவை மாவட்டத்திலும் இத்திட்டம் நடைமுறைக்குக் கொண்டு வரப்படும்."

குருவிக்குளம் ஊராட்சி ஒன்றியம் அளித்த வரவேற்புக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்ட தகவலைக் கூறினார்.

வேளாண்மைத் துறை அமைச்சர்

அன்பில் தர்மலிங்கம்

நிகழ்ச்சிகள்

நவ. 11, 12, 13: அன்பில்.

நவ. 14 காலை 7 மணி: கரூர்— குழந்தைகள் நாள் விழா; 10 மணி: தமிழ்நாடு லாரி உரிமையாளர் சம்மேளன டயர் தட்டுப்பாடு நீங்க மாநில மாநாடு.

பாதுகாப்புப் பணிகளுக்கு பஸ் -- லாரிகள்

கோரிப் பெறுவதற்கு அவசரச் சட்டம்

குடியரசுத் தலைவர் பிறப்பித்தார்

புதுடில்லி, நவ. 10—

மோட்டார் வண்டிகளை (பஸ், லாரிகள், டிரக்குகள்) கோரிப் பெறுவதற்கான அவசரச் சட்டத்துக்குக் குடியரசுத் தலைவர் வி. வி. கிரி ஒப்புதல் அளித்துவிட்டார்.

பாதுகாப்புப் பணிகளுக்காகவும் -- மற்ற பணிகளுக்காகவும் இவற்றைக் கோரிப் பெற அவசரச் சட்டம் வகை செய்கிறது.

நாட்டுப் பாதுகாப்பு அல்லது புயல் -- வெள்ளம் போன்றவைகளால் பாதிக்கப்படும் இடங்களுடன் தொடர்பு கொள்ளும் பணிகளுக்காக இராணுவம் அல்லது சிவில் நிர்வாகம் பயன்படுத்துவதற்காக எந்த வண்டியையும் கோரிப் பெறுவதற்கான அதிகாரங்களை அரசு மேற்கொள்கிறது.

அவசர நிலை பிரகடனம் செய்யப்படாததால், மோட்டார் வண்டிகளைக் கோரிப் பெறுவது இயலவில்லை என்ற காரணத்தால் அவசரச் சட்டம் அவசியமாயிற்று.

கட்டாய கிராசுடி சட்டம்

அடுத்த நாடாளுமன்ற கூட்டத்தில் வரும்

ஐதராபாத் நவ. 9—

"தொழிலாளர்களுக்கு நாடு முழுவதிலும் ஒரே மாதிரியான கிராசுட்டி தருவதற்கான சட்டம் ஒன்று விரைவில் இயற்றப்படும்"

என்று, மத்திய தொழிலாளர் நல அமைச்சர் ஆர். கே. காடில்கார் இங்கு தெரிவித்தார்.

"இதற்கான மசோதா அடுத்த நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் கொண்டுவரப்படும்" என்றும் அவர் கூறினார்.

"கிராசுட்டி திட்டத்தைத் தொழில் நிறுவனங்கள் -- மருத்துவமனை -- சிறு கடை ஊழியர்களுக்கும் விரிவுபடுத்த முடிவெடுக்கப்பட்டிருக்கிறது" என்றும் அவர் தெரிவித்தார்.

தொழில் தகராறுகளைத் தீர்க்கத் தனி அமைப்பு

"தொழில் தகராறுகளை விரைவாகத் தீர்க்க ஒரு அமைப்பை உருவாக்க மத்திய அரசு, சட்டம் ஒன்றை இயற்ற இருக்கிறது; தொழிற்சங்கம் ஒன்று கேட்டுக் கொண்டதன்மீது அது சிறிது காலத்துக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது" என்றும் அவர் தெரிவித்தார்.

தமிழக அரசின் கோரிக்கை வெற்றி பெறும் அறிகுறி

தொழிலாளர் நலனுக்கான இரண்டு முக்கிய சட்டத் தொகுப்புகள் அடுத்து நடக்கவிருக்கும் நாடாளுமன்றக் கூட்டத்தில் கொண்டுவரப்படுகின்றன; இதன் மூலம் கிராசுடி (ஓய்வு ஊதியம்) வழங்குவதைக் கட்டாயமாக்கும் ஒரே சீரான அனைத்திந்திய சட்டம் கொண்டுவரப்பட வேண்டுமென்ற தமிழக அரசின் கோரிக்கை வெற்றி பெறும்.

எந்த ஒரு தொழிற்சாலையானாலும் அது மூடப்படுகின்ற நிலை வருமானால், முடப்படுவதற்கு 60 நாட்களுக்கு முன்னதாக அறிவிப்பு விடப்பட வேண்டும் என்பதற்கான சட்டம் வருகிறது.

இதேபோல, கிராசுடியை எல்லாத் தொழிற்சாலைகளும் வழங்க வேண்டும்; ஒரு தொழிலாளி வேலை பார்த்த காலத்துக்கு ஆண்டொன்றுக்கு -- அரை மாதச் சம்பளம் என்ற அளவில் -- கிராசுடி கட்டாயமாகக் கொடுக்கப்பட வேண்டும்.

சீன கைவிரிப்பு?....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"சீனவின் அறிக்கையைப் பார்த்தால், அதன் கருத்து பாகிஸ்தானுக்கு விரோதமானதாகக்கூட இருப்பதாகத் தெரிகிறது" என்றும் அவர் குறிப்பிட்டார்.

கலைக் குழு முகவரி

எம். ஜே. ஆர். பாண்டியன் பங்கேற்கும் தமிழரசன் -- தேன்மொழி குழுவினரின் 'சீரழிந்த சிண்டிகேட்' எனும் சமூகக் கலை நிகழ்ச்சி நடத்த விரும்புவோர் தொடர்பு கொள்க:—

அண்ணா கலைக் குழு, 33-பி, கீழச்சண்முகபுரம் பிராப்பர் தெரு, தூத்துக்குடி-2, நெல்லை மாவட்டம்.

[illegible] முன்னேற்றக் கழகத்திற்காக [illegible] இரா. செழியன் எம்.ஏ. அவர்களை ஆசிரியரா[illegible] வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, [illegible] செட்டித் தெரு, சென்னை-1) அச்சிட்டு வெளியிடப்பட்டது.